**2018 இல் கேரளாவுக்கு வழங்கப்பட்ட பேரிடர் நிவாரண உதவித்தொகை:**

2018 ஆம் ஆண்டு கேரளாவில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விதமாக தமிழ்நாடு வணிகவரித்துறை மற்றும் பத்திரப்பதிவுத்துறை அரசாணை எண்.217 நாள்.23.08.2018 வெளியிட்டது. அதில் கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு வணிகம் மூலமாக அதிகமான வருவாய் ஈட்டித்தரக்கூடிய கேரளாவின் எல்லைப்புற மாவட்டங்ளான மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்ட வணிகர்களின் நலன் கருதி நட்புணர்வுடன் கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்திலிருந்து ரூபாய்.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**கோவிட்–19 சிறப்பு உதவித் தொகை:**

கோவிட்–19 முழு ஊரடங்கு காரணமாக வர்த்தக நலவாரியத்தில் உள்ள உறுப்பினர்கள் துன்பத்தைத் தணிக்கும் பொருட்டு அனைத்து செயல் உறுப்பினகளுக்கு உதவித் தொகை வழங்க அரசாணை எண். 189, நாள்: 11.04.2020 (ம) அரசாணை எண். 233, நாள் 12.05.2020 வருவதய் (ம) பேரிடர் மேலாண்மை வாரியம் (DM–II) : மூலமாக மாண்புமிகு தமிழக முதலவர் அவகள், ரூ.2,000 இரண்டு தவணையாக வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். மேலும் ஆணை எண். 357, நாள் 16.07.2020 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை வாயம் (DM–II) மூலமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளுர், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு மட்டும் 3 வது தவணையாக ரூ.1,000 வழங்க ஆணை இடப்பட்டது. வர்தக உறுப்பினர்களுக்கான உதவித்தொகை வணிகவரித்துறை துணை ஆணையகளால் வழங்க முதன்மை செயலர் / வணிகவரித்துறை ஆணையர் அவர்களால் செயல் முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்மூலம் செயலில் உள்ள 8,306 உறுப்பினர்களுக்கு ரூ.1,68,86,000 வழங்கப்பட்டது.

இதுவரை (08.08.2023) 387 தகுதியான உறுப்பினர்களுக்கு 133.45 இலட்சம் ரூபாய் வணிகர் நல வாரியத்திலிருந்து குடும்ப நல உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**பொது:**

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் இரண்டு விதமான உறுப்பினர்கள் அதாவது சாதாரண உறுப்பினர்கள் மற்றும் 30 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டது. அலுவல்சாரா 30 உறுப்பினர்களும் அரசால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமிக்கப்படுகிறார்கள். முன்பு சாதாரண உறுப்பினர் ஆவதற்கு வணிகர், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959 இன் கீழ் பதிவு பெற்ற வணிகர்களாக இருக்க வேண்டும். மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்களாக இருக்க வேண்டும். மேலும், தமிழ்நாடு விற்பனை வரிச்சட்டத்தில் பதிவு பெற்று தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தில் வரிவிதிப்பு வரம்புக்குட்படாத காரணத்தால் பதிவுபெறாமல் உள்ள வணிகர்களும் இதில் உறுப்பினர் ஆகலாம்.

**சிறு வணிகர்களும் உறுப்பினர் ஆதல்:**

சென்ற 2011 ஆம் ஆண்டு தமிழக அரசு ஆணை (பல்வகை) 69, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள்.29.06.2011 இன் படி நடைபாதை வணிகர்கள் அல்லாமல், தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்கள் இவ்வாரியத்தில் தாங்கள் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற உரிமத்தின் அடிப்படையில் உறுப்பினர் ஆகலாம்.

**புதுப்பிக்கும் கட்டணம் இல்லை:**

தமிழக அரசு ஆணை (பல்வகை) எண். 69, நாள். 29.06.2011 இன் படி இந்த வாரியத்தில் முன்னர் உள்ள உறுப்பினர்கள் மற்றும் இனி வருங்காலங்களில் இணையும் உறுப்பினர்கள், புதுப்பிக்கும் கட்டணம் ஆக ரூ.100/– இனி செலுத்த வேண்டியதில்லை. இது வாரிய உறுப்பினர்களின் நலத்தினைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ளது.

**வாரிய நலத்திட்டங்களால் பயனடைந்தோர்:**

வணிகர் நல வாரியம் உறுப்பினர்களின் நலத்தினைக் கருத்தில் கொண்டு ஒன்பது வகையான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேற்கூறிய நலத்திட்டங்கள் மூலம் 1989 ஆம் ஆண்டு முதல் 08.08.2023 வரை பயனடைந்தோர் 8,880 உறுப்பினர்கள். இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.3,20,73,000/– ஆகும். உறுப்பினர் சேர்க்கைக் கட்டணம் ரூ.500/– ஒரே முறை செலுத்தப்படுவது குறித்து இவ்வாரியத்தில் 12வது கூட்டத்தில் (08.06.2010) அன்று முடிவு செய்து அவ்வாறே பின்பற்றி வரப்படுகிறது. சாதாரண மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களுக்கு வண்ண நிறங்களில் அச்சிடப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. சாதாரண உறுப்பினர்களுக்கு அந்தந்த வரிவிதிப்பு அலுவலர் மூலமாகவே வண்ண அடையாள அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் வழங்கப்படும் பலவகை நலத்திட்டங்கள் குறித்து சுவர் விளம்பரங்கள், கையடக்கப் பிரசுரங்கள் மூலம் வணிகர்கள், பொது மக்கள் மற்றும் வாரிய உறுப்பினர்களின் நலத்தினைக் கருத்தில் கொண்டு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும், வணிகவரித் துறையில் உள்ள சரக தலைமை வரிவிதிப்பு அலுவலர்கள், உதவி, துணை, இணை ஆணையர்கள் மூலம் தொடர்ந்து வணிகர்களுக்கு இத்திட்டங்கள் குறித்து அறிவிக்கப்பட்டு வருகிறது. நேரிடையாக இவ்வாரியத்திற்கு வருகை தரும் வணிகர்களுக்கும் இத்திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

**இணைய வழி சேவை:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் 16.06.2021 அன்று தமிழ்நாடு வணிகவரித்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர வணிகர்களுக்கு இணையவழி வசதி சேவையைச் (https://www.tn.gov.in/tntwb/tamil) சென்னையில் தொடங்கிவைத்தார்.

**<u>கட்டணமின்றி உறுப்பினர் சேர்க்கை:</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தது போல் வணிகர் நல வாரியத்தை சீரமைத்து உறுப்பினர் சேர்க்கையை செம்மைப்படுத்தி, திறம்பட செயல்படும் வகையில் சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இந்த வாரியத்தின் மூலம் நலத்திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தில் பதிவுபெற்று "விற்று முதல் அளவு" (Turn Over) ரூ.40,00,000/– (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர, சேர்க்கைக் கட்டணத்தொகையான ரூ.500/–ஐ வசூலிப்பதிலிருந்து மூன்று மாதங்களுக்கு விலக்களித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யும் அனைத்து புதிய சிறு மற்றும் குறு வணிகர்களுக்கு சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு வணிகப்பேரமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று இச்சேவையை 31.03.2022 வரை கால நீட்டிப்பு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இச்சலுகையைப் பயன்படுத்தி தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யும் அனைத்து புதிய சிறு வணிகர்களுக்கு சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையைப் பயன்படுத்தி 40,994 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல வாரியத்தில் சேர்ந்துள்ளனர்.

**உதவித்தொகை உயர்த்தி வழங்குதல்:**

திருச்சியில் நடைபெற்ற 39வது வணிகர் தினத்தையொட்டி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தலைவர் அவர்களால், தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் உயிரிழக்கும் பட்சத்தில் அவர்களது குடும்பத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தால் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தொகை ரூ.1,00,000/– ஆனது வரும் காலங்களில் ரூ.3,00,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும், தீ விபத்துக்களில் பாதிக்கப்படும் வணிகர்களுக்கான உடனடி இழப்பீடு ரூ.5,000/– ஆனது வரும் காலங்களில் ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**இணைப்பு – 1**

**தமிழ்நாடு வணிகர் நல வாரியம்**

**08.08.2023 வரை உறுப்பினர் சேர்க்கை விவரம்**

| **வரிசை எண்.** | **வருடம்** | **உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | 2001 வரை | 39,387 |
| 2 | 2002 | 620 |
| 3 | 2003 | 221 |
| 4 | 2004 | 554 |
| 5 | 2005 | 1052 |
| 6 | 2006 | 2435 |
| 7 | 2007 | 788 |
| 8 | 2008 | 364 |
| 9 | 2009 | 263 |
| 10 | 2010 | 327 |
| 11 | 2011 | 314 |
| 12 | 2012 | 327 |
| 13 | 2013 | 111 |
| 14 | 2014 | 74 |
| 15 | 2015 | 10 |
| 16 | 2016 | 24 |
| 17 | 2017 | 1 |
| 18 | 2018 | 11 |
| 19 | 2019 | 96 |
| 20. | 2020 | 170 |
| 21. | 2021 | 37,167 |
| 22. | 2022 | 3,831 |
| 23. | 2023 (08.08.2023) | 24 |
| **மொத்தம்** | | **88,171** |

08.08.2023 வரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம்/தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 88,171 ஆகும்.

## இணைப்பு – 2

## 08.08.2023 முடிய தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நலத்திட்ட நிதி உதவிகளின் விவரங்கள்.

| வரிசை எண் | நலத்திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 387 | 133.45 |
| 2 | மருத்துவ உதவி | 52 | 13.11 |
| 3 | கல்வி உதவி | 94 | 3.26 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | உறுப்பினரின் வாரிசுகளுக்கு விளையாட்டு நிதி உதவி | 2 | 0.15 |
| 6 | சிறப்பான மாணவர்களுக்கு ஊக்கத் தொகை | 6 | 0.20 |
| 7 | நலிவுற்ற வணிகர்களுக்கு நிதி உதவி (Tri Cycle) | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி | 2 | 0.10 |
| 9 | கோவிட்–19 சிறப்பு உதவித் தொகை | 8,306 | 168.86 |
| | **மொத்தம்** | **8,880** | **3,20.73** |